# வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : CC.No.1154/2024
## வழக்கு சாட்சி PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மதன்பாபு | தாலுகா | : | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | : | பெரியசாமி | தொழில் | : | கேரளா லாட்டரி கடையில் வேலை |
| கிராமம் | : | திரிகூடபுரம் | வயது | : | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 6th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் திரிகூடபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கேரளா லாட்டரி கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 21.05.2024 அன்று இரவு 01.30 மணியளவில் விவேகானந்தர் தெருவில் வைத்து எனது மாமா மாடசாமி வீட்டின் அருகே வைத்து எதிரி உதயகுமார் என் அண்ணன் ராஜசேகரின் தலையில் கம்பு வைத்து அடித்தார். மற்ற எதிரிகள் கையால் என் அண்ணனின் முகத்திலும், முதுகிலும் அடித்தார்கள். என் அண்ணன் கீழே விழுந்தபோது, எதிரி மதன்குமார், சிவபிரகாஷ், மூர்த்தி ஆகியோர்கள் நெஞ்சில் மிதித்தார்கள். நான் என் அண்ணனின் அருகில் வரும் போது எதிரிகள் ஓடி விட்டார்கள்.

என்னுடைய அண்ணனின் காதிலிருந்து இரத்தம் வந்தது. என் அண்ணனை கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றேன். அங்கிருந்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி

வைத்தார்கள். காதில் இரத்தம் நிற்காததினால் அங்கிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் புகாரை சொக்கம்பட்டி காவல்நிலையத்தில் கொண்டு கொடுத்தேன். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். என் அண்ணன் 15 நாட்கள் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.06 19:43:16 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : CC.No.1154/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜசேகர் | தாலுகா | : | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | : | பெரியசாமி | தொழில் | : | டவர் வேலை |
| கிராமம் | : | திரிகூடபுரம் | வயது | : | 23 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 6th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் திரிகூடபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இ.பி டவர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 21.05.2024 அன்று இரவு 07.00 மணியளவில் உச்சிமகாளியம்மன் கோவிலில் திருவிழா நடந்தது. நான் பால் குடம் எடுத்தேன். கூட்டமாக கோவிலுக்குள் செல்லும் போது எதிரிகள் ஆடிக்கொண்டு வந்தபோது, என்னுடைய கை, கால் அவர்கள் மீது பட்டதினால் அவர்கள் அசிங்கமாக என்னை திட்டினார்கள். அங்கு வாக்குவாதம் வந்தது. பெரியவர்கள் வந்து விலக்கி விட்டார்கள். பின்னர், இரவு 12.00 மணிக்கு மேல் கோவிலில் சப்பரம் எடுக்க நான் செல்லும் போது, எதிரிகள் என்னை என்னுடைய மாமா மாடசாமி வீட்டின் அருகில் வைத்து வழிமறித்து அசிங்கமாக திட்டினார்கள். உதயகுமார் கட்டையால் என்னுடைய தலையில் அடித்தார். தலையில் எலும்பு உடைந்தது. நான் கீழே விழுந்தேன். மற்ற எதிரிகள் என்னை கையாலும், கம்பாலும் முதுகில் அடித்தார்கள். எதிரிகள் என் மீது மிதித்தார்கள். உதயகுமார் தலையில் அடித்ததில் என்னுடைய

காதிலிருந்து இரத்தம் வந்தது. நான் மயங்கி விட்டேன். என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். எனக்கு மயக்கம் தெளிந்த போது நான் பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். அங்கு 13 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.06 19:43:22 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.1154/2024**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாடசாமி | தாலுகா | : | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | : | மாடசாமித்தேவர் | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | திரிகூடபுரம் | வயது | : | 64 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 6th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் திரிகூடபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சாட்சி ராஜசேகர் என்னுடைய மருமகன். 21.05.2024 அன்று இரவு 01.30 மணியளவில் என்னுடைய வீட்டின் அருகே வைத்து ஏற்கனவே ராஜசேகருக்கும், எதிரிகளுக்கும் நடந்த சண்டையின் காரணமாக ஆஜர் எதிரிகளில் கடைசியாக நிற்கும் நபர் (உதயகுமார்) கம்பு வைத்து ராஜசேகரின் தலையில் அடித்தார். மற்ற எதிரிகளும் கூட்டமாக வந்து ராஜசேகரை கையால் அடித்தார்கள். ராஜசேகருக்கு தலையில் அடிப்பட்டு, காதிலிருந்து இரத்தம் வந்தது. பின்னர், அவரை முதலில் சொக்கம்பட்டி மருத்துவமனையிலும், பின்னர் கடையநல்லூர் அரசு மருத்துவமனையிலும், அங்கிருந்து தென்காசி அரசு மருத்துவமனையிலும் அழைத்து வந்தோம். பின்னர், தென்காசியிலிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.06 19:43:29 +0530